| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திருமதி. ந.லதா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும்<br>இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி. |

ந.க.எண். 012426 / எப்1 /2024 நாள். 09.12.2024

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மார்ச் 2025 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு – தேர்வெண்ணுடன் கூடிய பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவிறக்கம் (Download) செய்தல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட கடிதம், நாள்: 11.11.2024.

------

பார்வையில் காணும் இவ்வலுவலகக் கடிதத்தில், 2024–2025–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் GR எண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியல் **13.11.2024 பிற்பகல் முதல்** பதிவிறக்கம் செய்யுமாறும், அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் அத்திருத்தங்களை **15.11.2024 முதல் 22.11.2024 வரையிலான நாட்களில்** பதிவேற்றம் செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், மேற்கண்ட நாட்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு, மார்ச் 2025 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியல் **10.12.2024 பிற்பகல் முதல் பதிவிறக்கம்** செய்து கொள்ளுமாறு அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் உரிய அறிவுரையினை வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்/–
**இயக்குநர்**

<u>நகல்:</u>.

1. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

– தகவலுக்காகக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்